

ජේෂ කර්මාන්ත දෙපාර්තමේන්තුව

புடவைக் கைத்தொழில் திணைக்களம்

DEPARTMENT OF TEXTILE INDUSTRY

3 වන මහල, මහලේකම් කාර්යාල ගොඩනැගිල්ල, මාලිගාවත්ත, කොළඹ 10

3ஆம் மாடி,செயலகக் கட்டிடம், மாளிகாவத்தை, கொழும்பு 10

3rd Floor, Secretariat Building, Maligawatta, Colombo 10

2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
புடவைக் கைத்தொழில் திணைக்களம்

அத்தியாயம் 01 : நிறுவனத் தோற்றப்பாடு

1.1 அறிமுகம்

புடவைக் கைத்தொழில் திணைக்களமானது அனைத்து கைத்தறி நெசவு நடவடிக்கைகளையும் முறைப்படுத்துவதுடன் கொள்கைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி ஒழுங்குபடுத்துவதற்கும் மற்றும் மேற்பார்வை, ஒருங்கிணைத்தல் செயற்பாடுகளை இலங்கையின் கைத்தறி நெசவுக் கைத்தொழிற் துறையின் அபிவிருத்தியை நோக்கி கொண்டு நடாத்துவதற்கும் என உருவாக்கப்பட்டுள்ளது. இதனை தேவைப்படும் அறிவு மற்றும் திறன்களைக் கொண்ட மனித வளங்களை ஆடைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் வடிவமைப்பு நிலையங்கள் ஊடாக குறித்த துறையில் உருவாக்குவதன் மூலம் அடைவதை இலக்காகக் கொண்டுள்ளது.

1.2 நிறுவனத்தின் நோக்கு, இலட்சியப் பணி, குறிக்கோள்கள்

நோக்கு

“உள்நாட்டுத் தனித்துவம் மற்றும் கலாசாரத்திற்கு ஏற்றவகையிலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைச் செயற்பாடுகளை வெற்றிகொள்ளக்கூடிய வகையிலும் கைத்தறி நெசவுத்தொழில் துறையில் ஆக்கபூர்வமானதும் போட்டித்தன்மைமிக்கதுமான துணி உற்பத்தியில் உற்பத்தியாளர்களை ஈடுபடுத்துதல்.”

இலட்சியப் பணி

“அரச கொள்கைச் சட்டகத்தினுள் கைத்தறி நெசவுத்தொழிலின் அபிவிருத்திக்குத் தேவையான கொள்கைகளை வகுத்தல், குறிப்பிட்ட கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல், தேவைப்படும் சேவைகளையும் வசதிகளையும் வழங்குதல் மற்றும் நெறிப்படுத்துதல் மற்றும் இணைப்பாக்கத்தினூடாக கைத்தறி நெசவத்தொழில் துறையில் அளவுசார் மற்றும் தரம்சார் வளர்ச்சியை ஏற்படுத்துதல்.”

குறிக்கோள்கள்

- கைத்தறி நெசவுத்தொழிலின் அபிவிருத்திக்குத் தேவையான கொள்கைகளை வகுத்தல்.
- உற்பத்தி மற்றும் அபிவிருத்தி என்பவற்றை இலக்காகக் கொண்ட வேலைத்திட்டங்களை உருவாக்குதல்.
    - தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
    - வடிவமைப்பு உருவாக்க நிகழ்ச்சித்திட்டங்கள்
    - பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்.
- கைத்தறி நெசவுத்தொழில் துறையின் அபிவிருத்திக்குத் தேவையான ஆலோசகர்களையும் பணியாளர்களையும் பயிற்றுவித்தல்
- துறைக்குத் தேவையான ஊழியர்களைப் பயிற்றுவித்தல்
- சுந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை ஒழுங்குசெய்தல்)
- கைத்தறி நெசவுத்தொழிலை விரிவுபடுத்துவதனை நோக்கமாகக்கொண்ட பொருத்தமான கருத்திட்டங்கள், சுயதொழில் வாய்ப்புகள் மற்றும் உதவிச் சேவைகள் வழங்கப்படுதல், நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுதல்.
- கைத்தறி நெசவுத்தொழிலின் வடிவமைப்பு அபிவிருத்தி மற்றும் தரம்சார் மேம்பாடு என்பவற்றை இலக்காகக் கொண்ட கண்காட்சிகளும் போட்டிகளும் நடத்தப்படுதல்.
- தேசிய கைத்தறி நெசவுக் கைத்தொழில் கண்காட்சி நடத்தப்படுதல்
- கைத்தறி நெசவுத்தொழிலின் வளர்ச்சிக்குத் தேவையான ஆராய்ச்சிகள், பரீட்சித்தல்கள் மற்றும் பேணல் நடவடிக்கைகள்.
- புதிய தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்படுதல் மற்றும் உரிய அபிவிருத்தி நடவடிக்கைகள்.

1.3 பிரதான செயற்பாடுகள

1.3.1 நெசவுத்தொழில் பயிற்சிக் கருத்திட்டங்கள்

- **நெசவுத்தொழில் பயிற்சிப் பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொண்டு பயிற்சியளித்தல்**

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் இயங்கிவருகின்ற 14 நெசவுத்தொழில் பயிற்சி நிறுவனங்களினால் நடத்தப்படுகின்ற நெசவுத் தொழில் பற்றிய ஆறு மாதகால அடிப்படை பயிற்சிப் பாடநெறி மற்றும் 13 மாத இறுதிச் சான்றிதழ் பாடநெறி ஊடாக மேற்படி பயிற்சி வழங்கப்படுகின்றது.

அதன் பிரகாரம் 2022/2023 கல்வியாண்டுக்காக 150 மாணவர்களை இணைத்துக்கொள்வதற்காக நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டன.தகுதிபெற்ற மாணவர்களுக்காக 2022 மார்ச் 30 ஆம் திகதி பாடநெறி ஆரம்பிக்கப்பட்டது.

- **தேசிய கைத்தறி புடவைப் போட்டி, கண்காட்சி மற்றும் விருது வழங்கும் வைபவம்.**

கைத்தறி நெசவுத்தொழிலின் தரத்தினை மேம்படுத்துவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளை இலக்காகக் கொண்டு உள்நாட்டுத் துணி வகைகளை தயாரிக்கின்ற கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் ஆற்றல்களை விருத்தி செய்வதற்காகவும், ஊக்குவிப்பதற்காகவும்,அவர்களுடைய திறன்களை மதிப்பிடுவதற்காகவும் வருடாந்தம் நடத்தப்படுகின்ற தேசிய கைத்தறி புடவைப் போட்டியானது ஐப்பசி மாதம் 27 ஆம் திகதி 2022 ஆம் ஆண்டு நடாத்தப்பட்டதுடன் இறுதித் தீர்மான நடவடிக்கைகள் கட்டுபெத்த புடவைக் கைத்தொழில் திணைக்கள நிறுவனத்தில் நடத்தப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் குறித்த போட்டிகளுக்கான விருது வழங்கும் விழா 2022 மார்கழி 2 ஆம் திகதி கட்டுபெத்தவில் உள்ள ஆராட்சி பயிற்சி மற்றும் வடிவமைப்பு மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

1.3.2 பரீட்சைகள் நடத்தப்படுதல்

- **நெசவுத்தொழில் பயிற்சிப் பாடநெறிகளுக்கான பரீட்சை நடவடிக்கைகள்**

நெசவுத்தொழில் இறுதிச் சான்றிதழ் மற்றும் அடிப்படை பயிற்சிப் பாடநெறிகளுக்கான பரீட்சை நடவடிக்கைகள் 2022 மார்ச் 21– 23 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டன. அதற்காக நெசவுத்தொழில் பயிற்சி நிறுவனங்களைச் சேர்ந்த 145 மாணவர்களும் 62 வெளிவாரி விண்ணப்பதாரிகளும் தோற்றினர்.

பரீட்சைநிலையம்	நெசவுத்தொழில் பயிற்சி நிறுவனங்களைச் சேர்ந்தமாணவர்களின் எண்ணிக்கை	வேளிவாரி விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை
கொட்டல	**11**	**-**
கட்டுபெத்த	**05**	**01**
கட்டம்பே	**14**	**03**
கிரம	**08**	**03**
போயகனே	**19**	**01**
மாத்தளை	**15**	**05**
பண்டாரவளை	**14**	**09**
மாத்தறை	**-**	**-**
வட்டபுழுவ	**20**	**03**
பின்னவல	**13**	**02**
தலாவ	**08**	**01**
காலி	**04**	**01**
சம்மான்துறை	**11**	**24**
நல்லூர்	**03**	**09**
மொத்தம்	**145**	**62**

ஒரு வருட வடிவமைப்பு பயிற்சிப் பாடநெறியை பயில்வதற்காக 2021 ஏப்ரல் மாதம் இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களுக்காக பாடநெறியின் இறுதியில் நடத்தப்படுகின்ற பரீட்சை 2022 ஜூலை மாதம் நடத்தப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டன. அதில் கட்டம்பே வடிவமைப்பு பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த 11 மாணவர்களும் கட்டுபெத்த வடிவமைப்புப் பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த 14 மாணவர்களும் தோற்றியுள்ளனர்.

1.3.3 பணியிடைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

இதன் கீழ், நெசவாளர்கள், தொழில் முயற்சியாளர்கள் மற்றும் ஆலோசகர்கள் வரை விரிவடைந்து செல்லும் வகையில் புடவைக் கைத்தொழில் துறையின் வளர்ச்சிக்காக தேவைப்படும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் பதவியணியினர், மாகாண அரச, கூட்டுறவு, தனியார் துறை என்பவற்றைச் சேர்ந்த கைத்தறி புடவைக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் தொழில் ஆக்கவிளைவினை மேம்படுத்தும் நோக்கத்துடன் 2022 ஆம் ஆண்டில் 195 பயிற்சியாளர்களுக்கு 08 பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

2022ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பாடநெறிகள் பற்றிய விபரம்

தொடர் இலக்கம்	பாடநெறியின் பெயர்	நடத்தப்பட்ட திகதி	பங்கேற்றவர்களின் எண்ணிக்கை	நடத்தப்பட்ட இடம்
1	டிக் ஜல வடிவமைப்பு பயிற்சி	19முதல் 24.01.2022 வரை	26	கைத்தறி புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் கட்டுபெத்த
2	தும்பர ரட்ட பயிற்சி	14முதல் 16.03.2022 வரை	18	கைத்தறி புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் கட்டுபெத்த
3	நேர்மறை எண்ணங்கள் தொடர்பான பயிற்சி	28.03.2022	49	புடவை மற்றும் ஆடைகளுக்கான நிறுவனம்
4	வர்ண கலப்பு பயிற்சி	29முதல் 31.03.2022 வரை	35	கைத்தறி புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் கட்டுபெத்த
5	நூல் பிளீச்சிங் பயிற்சி	23முதல் 25.05.2022 வரை	20	கைத்தறி புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் கட்டுபெத்த
6	லெனோ தறி வடிவமைப்பு	03முதல் 06.10.2022 வரை	20	கைத்தறி புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் கட்டுபெத்த
7	நூல் வர்ணமாக்கல் மற்றும் இயற்கை வர்ணம்	18முதல் 20.10.2022 வரை	22	கைத்தறி புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் கட்டுபெத்த
8	நூல் டவல் வடிவமைப்பு	05முதல் 10.12.2022 வரை	05	தோணிக்கல், வவுனியா

1.3.4 கைத்தறி புடவைக் கைத்தொழில் கருத்திட்டங்களை ஆரம்பித்தல்

கைத்தறி புடவைக் கைத்தொழிலை அதிக பயனுள்ள வாழ்வாதாரமாக கிராம மட்டத்தில் விரிவுபடுத்தும் நோக்கில், பத்திக் கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சிற்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் புடவைக் கைத்தொழில் திணைக்களத்தினால் நாட்டின் பல்வேறு மாவட்டங்கள் உள்ளடக்கும் வகையில் கைத்தறி புடவை கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

உரிய பிரதேசங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு கைத்தறி புடவைக் கைத்தொழில் பற்றிய ஆறு மாதகால பயிற்சி வழங்கப்பட்டதன் பின்னர் கைத்தொழிலை ஆரம்பிப்பதற்குத் தேவையான கைத்தறிகள், அடிப்படை உபகரணங்கள் மற்றும் மூலப்பொருள்கள் இலவசமாக வழங்கப்படுவதையடுத்து பயிற்சி பெற்ற பயனாளிகளை கைத்தொழிலில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அவர்களுக்குத் தேவையான கைத்தறி உபகரணங்கள் இலவசமாக பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

தொடர் இலக்கம்	கருத்திட்டத்தின் பெயர்	பயிற்சியாளர்களின் எண்ணிக்கை
1	பேத்தபிட்டி கைத்தறி புடவைக் கைத்தொழில் கருத்திட்டம்	16
2	கணவா கைத்தறி புடவைக் கைத்தொழில் கருத்திட்டம்	09
3	கொபேகன கைத்தறி புடவைக் கைத்தொழில் கருத்திட்டம்	05
4	நெலியத்துகொட கைத்தறி புடவைக் கைத்தொழில் கருத்திட்டம்	05
5	கிங்குரலகந்த கைத்தறி புடவைக் கைத்தொழில் கருத்திட்டம்	04
6	கும்புக்கன கைத்தறிபுடவைக் கைத்தொழில் கருத்திட்டம்	07
7	நுவங்கதே கைத்தறி புடவைக் கைத்தொழில் கருத்திட்டம்	05
8	பொல்பித்திகம கைத்தறி புடவைக் கைத்தொழில் கருத்திட்டம்	09
9	மாத்தளே கைத்தறி புடவைக் கைத்தொழில் கருத்திட்டம்	06
10	வெகிகல கைத்தறி புடவைக் கைத்தொழில் கருத்திட்டம்	05
மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை		71


அதன் பிரகாரம், 2021 ஆம் ஆண்டு இனங்காணப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளில் 2022 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு.

தொடர் இலக்கம்	கருத்திட்டத்தின் பெயர்	பயிற்சியாளர்களின் எண்ணிக்கை
1	அமுனுகும்புற கைத்தறி புடவைக் கைத்தொழில் கருத்திட்டம்	10
2	அகுகம்பன கைத்தறி புடவைக் கைத்தொழில் கருத்திட்டம்	10
3	கனேமுல்ல கைத்தறி புடவைக் கைத்தொழில் கருத்திட்டம்	05
4	மகாவ கைத்தறி புடவைக் கைத்தொழில் கருத்திட்டம்	15
5	அலவ்வா கைத்தறி புடவைக் கைத்தொழில் கருத்திட்டம்	15
6	அம்பரலுவ கைத்தறிபுடவைக் கைத்தொழில் கருத்திட்டம்	15
7	கிரியெல்ல கைத்தறி புடவைக் கைத்தொழில் கருத்திட்டம்	15
8	வயம்ப கைத்தறி புடவைக் கைத்தொழில் கருத்திட்டம்	15
9	வாரியப்பொல கைத்தறி புடவைக் கைத்தொழில் கருத்திட்டம்	15
	மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை	115

1.3.5 புடவைக் கைத்தொழில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்காக சான்றிதழ் வழங்கும் விழா

2020/2021 கல்வியாண்டில் கல்வி பயின்று இறுதிச் சான்றிதழ் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற மற்றும் கைத்தறி புடவைக்கைத்தொழில் வடிவமைப்பில் உயர் பயிற்சிச் சான்றிதழ் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு 2022.10.15 ஆம் திகதி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

1.4 நிறுவனக் கட்டமைப்பு



1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

- தாபனப் பிரிவு
- அபிவிருத்திப் பிரிவு
- கணக்குப் பிரிவு

1.6 திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்கள்

பின்வரும் நிறுவனங்கள் தற்போது இத்திணைக்களத்தின் கீழ் இயங்கிவருகின்றன.

1.) ஆய்வு, பயிற்சி, வடிவமைப்பு மற்றும் சேவைகள் நிறுவனம், 280/1, காலி வீதி, கட்டுபெத்த

2.) இயற்கை வண்ணங்கள் கருத்திட்டம், இராஜகிரிய

3.) நெசவுத்தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் வடிவமைப்பு பயிற்சி நிறுவனங்கள் புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் இயங்கிவருகின்ற தொழிற் பயிற்சி நிறுவனங்கள் 14 மற்றும் வடிவமைப்புப் பயிற்சி நிறுவனங்கள்

தொடர் இலக்கம்	நிறுவனம்	முகவரி
01	கைத்தறி நெசவுத்தொழில் பயிற்சி நிறுவனம் கட்டுபெத்த	1/280, காலி வீதி, கட்டுபெத்த, மொறட்டுவ.
02	கைத்தறி நெசவுத்தொழில் பயிற்சி நிறுவனம் கொட்டல	கொட்டல, வேயாங்கொடை
03	கைத்தறி நெசவுத்தொழில் பயிற்சி நிறுவனம் போயகனே	போயகனே, குருநாகல்.
04	கைத்தறி நெசவுத்தொழில் பயிற்சி நிறுவனம் பின்னவல	பின்னவல,இரம்புக்கனை
05	கைத்தறி நெசவுத்தொழில் பயிற்சி நிறுவனம் வட்டபுழுவ	அருப்பல வீதி, வட்டபுழுவ, கண்டி
06	கைத்தறி நெசவுத்தொழில் பயிற்சி நிறுவனம் கட்டம்பே	கட்டம்பே, பேராதனை
07	கைத்தறி நெசவுத்தொழில் பயிற்சி நிறுவனம் மாத்தளை	கோன்கஹமுல,பலாபத்வல, மாத்தளை
08	கைத்தறி நெசவுத்தொழில் பயிற்சி நிறுவனம் மாத்தறை	ஹக்மன வீதி, மாத்தறை
09	கைத்தறி நெசவுத்தொழில் பயிற்சி நிறுவனம் கிரம	கிரம

10	கைத்தறி நெசவுத்தொழில் பயிற்சி நிறுவனம் பண்டாரவளை	கினிகம, பண்டாரவளை
11	கைத்தறி நெசவுத்தொழில் பயிற்சி நிறுவனம் தலாவ	மிஹிரிகம, தலாவ.
12	கைத்தறி நெசவுத்தொழில் பயிற்சி நிறுவனம் காலி	கலேகான வீதி, கிங்தொட்ட, காலி.
13	கைத்தறி நெசவுத்தொழில் பயிற்சி நிறுவனம் நல்லூர்	194இபருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
14	கைத்தறி நெசவுத்தொழில் பயிற்சி நிறுவனம் சம்மாந்துறை	சம்மாந்துறை
15	வடிவமைப்புப் பயிற்சி நிறுவனம் கட்டுபெத்த	1/280இகாலி வீதி, கட்டுபெத்த, மொறட்டுவ.
16	வடிவமைப்புப் பயிற்சி நிறுவனம் கட்டம்பே	கட்டம்பே, பேராதனை

அத்தியாயம் 02:முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

2.1 நிறுவனத்தின் முன்னேற்றம்

- நெசவுத்தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கு 150 மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.
- 08 பணியிடைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டதோடு அதில் 195 பயிற்சியாளர்கள் பங்கேற்றுள்ளர்.
- நடத்தையில் முன்னேற்றத்தினை ஏற்படுத்தும் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.
- 207 மாணவர்களுக்காக நெசவுப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை மற்றும் வடிவமைப்புப் பயிற்சிப் பாடசாலை பரீட்சை நடத்தப்பட்டன.
- பாடசாலையை விட்டுச் சென்ற மாணவர்களுக்கு தேசிய தொழிற் பயிற்சித் தகைமை (NVQ) 4 மட்டம் வரை பயிற்சி வழங்கப்படுதல்.
- 2022.10.27 ஆம் திகதி கட்டுபெத்த பயிற்சி நிறுவனத்தில் கைத்தறி புடவைக் தொழில் மாகாணப் போட்டியின் இறுதி முடிவுகளை தீர்மானிக்கும் பணிகள் இடம்பெற்றன.
- 2022 ஆம் ஆண்டிற்கான கைத்தறி புடவைக் கைத்தொழில்துறை விருதுகள் வழங்கும் விழா 2022.12.02 ஆம் திகதி கட்டுபெத்த பயிற்சி நிறுவன மண்டபத்தில் நடைபெற்றது.
- கைத்தறி நெசவுத் தொழிலுக்குரிய வர்த்தக கண்காட்சி சிறிமாவோ பண்டாரநாயக்க மகாநாட்டு மண்டபத்தில் 2022 டிசம்பர் 3, 4 மற்றும் 5ஆம் திகதிகளில் நடைபெற்றது.
- 2021 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட கைத்தறி புடவைக் கைத்தொழில் பயிற்சிக் கருத்திட்டங்கள் 10இன் ஆரம்பப் பயிற்சி நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இக்கருத்திட்டங்களில் 71 பேர் பயிற்சி பெறுகின்றனர்.
- 2022 ஆம் ஆண்டு 60 மணவர்களுக்கு RPL முறையின் கீழ் NVQ 4 மட்டத்தினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- 1980 – 1982 காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமாகவிருந்த 10 விசைத்தறி தொழில்முயற்சிகளில் 10 வருடங்களுக்குக் குறைவான சேவைக் காலத்தைக் கொண்டுள்ள 4166 இயந்திரத் தொழிலாளர்களுள் 80% வீதமானோர் உயிர்வாழ்வதாகக் கருத்திற்கொண்டு 3332 பேருக்கு அவர்கள் உயிர் வாழும் வரை மாதாந்தக் கொடுப்பனவொன்றை பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்குதல்.
- ITMIS முறைமையினூடாக நாளாந்த செலுத்தல் நடவடிக்கைகளை இணையவழியூடாக இற்றைப்படுத்தல் மற்றும் செலுத்தல் நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்ளுதல்.
- மாத்தறை, காலி, கிரம மற்றும் தலாவ புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களைப் புதுப்பித்தல்
- புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்கு சொந்தமான 11 நிலங்களில் 9 நிலங்கள் அந்தந்த பிரதேச செயலகங்களிற்கு கையளிக்கப்பட்டிருந்தன.

2.2 நிறுவனத்தின் எதிர்கால நோக்கு

- 10 கைத்தறி புடவை உற்பத்திக் கிராமங்களை பிரதேச செயலகப் பிரிவு மட்டங்கங்களில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- கைத்தறி புடவை சார்ந்த 30 பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துவதற்குத் திட்டமிடுதல்
- புடவைக் கைத்தொழில் கண்காட்சி, விற்பனைச் சந்தை மற்றும் விருது வழங்கும் விழா என்பவற்றுக்கு ஒருங்கமைவாக நடத்தப்படுகின்ற மாகாண கைத்தறி புடவைக் கைத்தொழில் போட்டி மற்றும் தேசிய போட்டி நடத்தப்படுதல்.
- நெசவுப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை மற்றும் வடிவமைப்பு பயிற்சிச் சான்றிதழ் பரீட்சை நடத்தப்படவுள்ளன.
- திணைக்களத்திற்குச் சொந்தமான 14 கைத்தறி நெசவுப் பாடசாலைகளில் 4 பாடசாலைகளை மிகவும் கவர்ச்சிகரமான வகையில் நவீனமயப்படுத்துதல்.
- 1980 – 1982 காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமாகவிருந்த 10 விசைத்தறி தொழில்முயற்சிகளில் 10 வருடங்களுக்குக் குறைவான சேவைக் காலத்தைக் கொண்டுள்ள 4166 இயந்திரத் தொழிலாளர்களுள் 80% வீதமானோர் உயிர்வாழ்வதாகக் கருத்திற்கொண்டு 3332 பேருக்கு அவர்கள் உயிர் வாழும் வரை மாதாந்தக் கொடுப்பனவொன்றை பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்குதல். மீதமுள்ள 20% இயந்திர இயக்குநர்களுக்கான மாதாந்த கொடுப்பனவுகள் 2023 ஆம் ஆண்டளவில் கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- திணைக்கள அலுவலர்களிற்கு அறிவு, திறன் மற்றும் நடத்தையை மேம்படுத்தும் நோக்கில் கொள்திறன் அபிவிருத்தி பயிற்சிப்பட்டறை ஒழுங்குபடுத்தல்.
- 14 பாடசாலைகள் மற்றும் 2 வடிவமைப்பு பயிற்சி நிலையங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி நிகழ்வை ஒழுங்குபடுத்தல்.

2.3 சவால்கள்

- பொருத்தமான அலுவலர்களின்மை
- தேவையான நிதி ஒதுக்கீடு இன்மை
- இட வசதி போதாமை
- உள்ளக கணக்காய்வாளர் மற்றும் தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாமை
- தகவல் தொழில்நுட்ப விடயங்களைக் கையாழ்வதற்கு தேவையான தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியணிக்குரிய அனுமதி கிடைக்காமை.
- கைத்தறி நெசவிற்கான மூலப்பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை
- கைத்தறி நெசவு உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தலுக்கான வாய்ப்புகள் குறைவாக காணப்படுகின்றமை
- கைத்தறி நெசவு உற்பத்திகளுக்கான பெறுமதி கூட்டல் நடவடிக்கைகளில் மட்டுப்பாடு காணப்படுவதுடன், வெளிநாட்டு சந்தைகளை மையப்படுத்தியதாக இல்லாமை.

2.4 நிறுவனத் தலைவரின் ஒப்பம்



பெயர் : யு. வீ. எஸ். சேனானி செனெவிரத்ன

பதவி : பணிப்பாளர

அத்தியாயம் 03 : ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

2022 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

வரவு செலவு(நடப்பு வருடம்)		குறிப்பு	உண்மையான		
			நடப்பு வருடம் ரூ.		கடந்த வருடம் ரூ.
-	**வருமானப் பெறுகைகள்**		-		-
-	வருமான வரி	1	-		-
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-		-
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-		-
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-		-
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-		-
-	**வருமானமற்ற பெறுகைகள்**		-		-
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		198,740,000		314,315,000
-	வைப்புகள்		1,542,569		4,112,082
-	முற்பணக் கணக்குகள்		5,552,804		4,701,338
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-		-
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**205,835,373**		**323,128,420**
-	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)**		**205,835,373**		**323,128,420**
-	**திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)**		-		-
-	**தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)**		**205,835,373**		**323,128,420**
	கழி : செலவினம்				

	மீண்டுவரும் செலவினம்				
77,500,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	74,754,339		66,354,042
21,500,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	18,973,472		21,345,463
215,500,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	215,696,318		185,267,721
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-		-
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-		-
314,500,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**309,424,129**		**272,967,226**
	மூலதனச் செலவுகள்		-		-
800,000	மூலதனச் சொத்துக்களுக்கான புனரமைப்பு மற்றும் மேம்பாடு	10	1,015,963		5,129,878
200,000	மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்தல்	11	105,800		39,500
-	மூலதன மாற்றல்கள்	12	-		-
-	நிதிசார் சொத்துக்களுக்கான கையகப்படுதல்	13	-		-
-	ஆற்றல் விருத்தி	14			44,387,641
30,000,000	ஏனைய மூலதனச் செலவுகள்	15	29,958,071		-
31,000,000	**மொத்த மூலதனச் செலவு(உ)**		**301,079,834**		**49,557,019**
	வைப்புக் கொடுப்பனவுகள்		5,016,846		1,856,625
	முற்பணக் கொடுப்பனவுகள்		5,258,228		7,196,196
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-		-
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		10,275,074		9,052,821
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		**350,779,037**		**331,577,066**
345,500,000	**டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)**		**(144,943,664)**		**(8,448,646)**
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		**(144,943,664)**		**(8,448,646)**
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		**(144,943,664)**		**(8,448,646)**

3.2 நிதி நிலை பற்றிய கூற்று

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2022 ரூபா	2021 ரூபா
நிதி சொத்துக்கள் அற்று			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீ-6	268,815,527	268,709,727
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீ-5(a)	19,200,608	19,495,184
காசு மற்றும் காசுக்குச் சமானமை	ஏசீ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**288,016,135**	**288,204,911**
நெறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
நிறைசெரிக்கு நெறிய சொத்துக்கள்		19,081,908	15,902,208
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		268,815,527	268,709,727
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீ-5(f		
நடமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீ-4	118,700	3,592,976
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**288,016,135**	**288,204,911**

பக்க இலக்கம் P.1. முதல் .... வரை ஏசீ 1 முதல் ஏசீ 7 வரையான மாதிரிப படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் ..... முதல் ..... வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் நிறைசெரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறனிக்க உள்ள நிருவாகத் தொகுதியொன்று அரிக்கையிடும் நிருவனத்தில் காணப்படுகின்று எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ள நிருவாகத் தொகுதியின் செயற்றிறன மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமையாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அதிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

(பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்)
பெயர்:
பதவி :
திகதி : 27/02/2023

J.M. Thilaka Jayasundara
Secretary
Ministry of Industries
73/1, Galle Road, Colombo 03.

கணக்கீட்டு உத்தியோகத்தர்)
பெயர்:
பதவி :
திகதி : 28/02/2023

C. R. MAMUHEWA
Director (Acting)
Department of Textile Industry
3rd Floor, Secretariat Building
Maligawatta, Colombo 10.

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்)
பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர்:
திகதி : 27/03/2023

H. G. Nandani
Accountant
Department of Textile Industry
3rd Floor,
Secretariat Building,
Maligawatta, Colombo 10.

2

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

2022 டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மையான	
	நடப்பு வருடம் (ரூபா)	நடப்பு வருடம் (ரூபா)
தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான காசுப் பாய்ச்சல்கள்		
மொத்த வரி வருமதிகள்	-	-
கட்டணங்கள், மிகைவிதிப்பு, தண்டப்பணம் மற்றும் அனுமதிப்பத்திங்கள்	-	-
இலாபங்கள்	-	-
வருமானமல்லா வருமதிகள்	-	-
பிற வருமான தலைப்புக்களின் கீழ் சேகரிக்கப்பட்டவை	5,020,551	9,207,719
பணி முற்பண வருமதிகள	198,740,000	314,315,000
கிடைத்த முற்பணங்கள்	5,552,804	5,278,841
கிடைத்த வைப்பு	1,542,569	4,112,082
தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான மொத்தப் பணம்(அ)	**210,855,924**	**332,913,642**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	93,727,811	87,654,005
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	215,696,318	185,267,721
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	7,963,953	1,375,826
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	-	-
முற்பணக் கொடுப்பனவு	5,258,228	7,202,446
வைப்புக் கொடுப்பனவு	5,016,846	1,856,625
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**327,663,156**	**283,356,623**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**116,807,232**	**49,557,019**
தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான காசுப் பாய்ச்சல்கள்	93,727,811	87,654,005
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை	-	-

உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)		
<u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:</u>		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	31,079,834	49,557,019
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	31,079,834	49,557,019
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	(31,079,834)	(49,557,019)
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	**(147,887,066)**	
<u>நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)		
<u>கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:</u>	-	-
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)		
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)		
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	**(147,887,066)**	-
ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

1. அறிக்கையிடல் காலப்பகுதி

2022 சனவரி 01தொடக்கம் டிசெம்பர் 31ஆம் திகதி வரையிலான காணப்பகுதி இந்த நிதிக்கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதியாக அமைகின்றது.

2. அளவீட்டின் அடிப்படை

நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதோடு சில சொத்துக்களுக்கான வரலாற்றுக் கிரயமானது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு முன்னேற்றப்பட்டுள்ளது. வேறுவகையில் காட்டப்படாதுள்ளபோது கணக்குத் தயாரிப்புகள் மேம்படுத்தப்பட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.
நிதிக் கூற்றுக்களானவை இலங்கை நாணயத்தில் அண்மித்த ரூபாவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

3. வருமானம் இனங்காணப்படுதல்

பரிமற்று மற்றும் பரிமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கப்பட வேண்டிய கால எல்லைகளைப் புறக்கணித்து பணம் கிடைக்கப்படும் காணப்பகுதியில் வருமானமாக இனங்காணப்படுகின்றன.

4. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை இனங்காணுதல் மற்றும் அளவிடுதல்

சொத்தின் எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் நிறுவனத்திற்குக் கிடைக்கும் என்பதற்கான உறுதிப்பாடு காணப்படுகின்றபோது மற்றும் அச்சொத்துக்களை நம்பகமான முறையில் அளவிட முடியுமாக இருக்குமாயின் அச்சொத்துக்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக இனங்காணப்படும்.
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்பன கிரயத்தில் இனங்காணப்படுவதோடு கிரய மாதிரி ஏற்புடையதாக அமையாத சந்தர்ப்பங்களில் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி பயன்படுத்தப்படும்.

5. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கான ஒதுக்கம்

இந்த ஒதுக்கக் கணக்கு ஆனது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒத்த கணக்காகும்.

6. காசும் காசுக்குச் சமமானவைகளும்

2022 டிசெம்பர் 31ஆம் திகதியில் கையிருப்பு உள்நாட்டு புழக்க நாணயத் தாள்கள் மற்றும் நாணயங்கள் என்பன காசும் காசுக்குச் சமமானவைகளுமாகும்.

3.5 வருமான சேகரிப்பின் செயல்திறன

வருமானக் குறியீடு	வருமானக் குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு		
2002.01.00 2002.01.01	**வாடகை** அரசாங்கக் கட்டட வாடகை	-	-	870,757.43	
2002.02.00 2022.02.99	**வட்டி** ஏனைய	-	-	701,965.39	
2003.99.00	**ஏனைய வருமதிகள்**	-	-	2,354,608.75	
2004.01.00 2004.01.00	**சமூகப் பாதுகாப்பு பங்களிப்புத் தொகை** மத்திய அரசாங்கம்	-	-	3,057,547,11	

3.6 மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளை பயன்படுத்துவதன் செயல்திறன்

ஒதுக்கீட்டு வகை	மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள்		உண்மையான செலவு	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு, இறுதி ஒதுக்கீட்டின் % ஆக
	ஆரம்ப ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டெழும்	314,500,000	314,500,000	309,424,129	98.5%
மூலதன	31,250,950	31,250,950	31,079,834	99.5%

3.7 நி.பி.208 இன் பிரகாரம் பிற அமைச்சுக்கள்/திணைக்களங்களின் பிரதிநிதியாக இத் திணைக்களத்திற்கு/மாவட்டச் செயலகத்திற்கு / மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள

தொடர் இலக்கம்	ஒதுக்கீடு கிடைக்கப்பட்ட அமைச்சு.்.திணைக்களம்	ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடுகள்ெ		உண்மையான செலவு ரூபா	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு, வழங்கப்பட்ட இறுதி ஒதுக்கீட்டின் % ஆக
			ஆரம்ப ஒதுக்கீடு ரூபா.	இறுதி ஒதுக்கீடு ரூபா		
130	மாகாண சபைகள், உள்ளுராட்சி அமைச்சு	பொருளாதார உத்தியோகத்தர்களுக்கான செலுத்தல்	1,372.992.86	1,372,992.86	1,372.992.86	100%
253	ஓய்வூதியத் திணைக்களம்	முற்பண சலுகை தீர்க்கப்படுதல்	5,360,000.00	5,360,000.00	5,322,748.40	99%
439	கைத்தொழில் அமைச்சு	தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையிடம் NVQ சான்றிதழ்களை பெறல்	1,268,212.00	1,268,212.00	1,268,212.00	100%

3.8 நிதியல்லா சொத்துக்களின் அறிக்கையிடலுக்கான செயல்திறன

சொத்துக்கள் குறியீடு	குறியீட்டின் விபரம்	2022.12.31ஆம் திகதியில் பொருட் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் நிலுவை	2022.12.31 ஆம் திகதியில் நிதி நிலை அறிக்கையின் பிரகாரம் நிலுவை	எதிர்காலத்தில் கணக்கிடப்படவுள்ள	முன்னேற்றம் % மாக அறிக்கையிடப்படுதல்
9151	கட்டிடங்களும் கட்டமைப்புகளும்	127,979,125.00	127,979,125.00	-	100%
9152	இயந்திர சாதனங்கள்	41,277,552.00	41,277,552.00	-	100%
9153	காணி	99,561,850.00	99,561,850.00	-	100%
9154	அருவச் சொத்துக்கள்	-	-	-	-
9155	உயிரியல் சொத்துக்கள்	-	-	-	-
9160	இடம்பெற்றுவரும் வேலைகள்	-	-	-	-
9180	குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்	-	-	-	-

3.9 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

எனது இலக்கம்: ரஏீசீ/ஏ/டீரீஜ/எப்எஸ்/22/25 திகதி: 2023 மே 30

பணிப்பாளர்,

புடவைக் கைத்தொழில் திணைக்களம்.

தலைப்பு 303 - புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 2022 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை

---

1. **நிதிக் கூற்றுக்கள்**

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 303 - புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 2022 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களைக் கொண்டமைந்த 2022 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் மூலம் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, நிதிக் கூற்றுக்கள், 2022 டிசெம்பர் 31 ஆம் திகதியில் புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் மீது அடிப்படையாக அமைந்து எனது அபிப்பிராயம் முனைப்பழி செய்யப்படுகின்றது. இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக எனது காணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பானது கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலதிகமாகவும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதும் பொருத்தமானதுமென்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் பிரதம கணக்கீட்டு அலுவலரினதும் கணக்கீட்டு அலுவலரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை வெளிப்படுத்தும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளக நிர்வாகத்தை தீர்மானிப்பது கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு திணைக்களமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் நிதி நிருவாகத்திற்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து பேணிச் செல்வதாக கணக்கீட்டு அலுவலர் உத்தரவாதப்படுத்த வேண்டுமென்பதோடு அந்த முறைமையின் ஆக்கவிளைவு தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் முறைமையை பயனுள்ள வகையில் பேணிச் செல்வதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களுக்கான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஓட்டு மொத்தமாக, மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுப்பதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கையினை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றைப் பெற்றுக்கொள்ளும்போது மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கேற்ப அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகள் வடிவமைத்துச் செயற்படுத்தப்பட்டன. மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை

மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கப்படவில்லையென்ற போதிலும் சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றுக்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியிருப்பதனை மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பணம், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீடு செய்யப்பட்டதோடு அதன்பொருட்டு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளதென்பது மதிபீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு அலுவலர் விழிப்பூட்டப்பட்டுள்ளார்.

1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திசைவாகின்றன.

(ஆ) கடந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த விதப்புரைகள் நடைமுறைபடுத்தப்பட்டிருந்தன.

1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 வருமானம் அல்லாத வருமதிகள்

காசுப் பாய்ச்சல் கூற்றில் இதர வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் 1,740,746 ரூபா குறைவாகவும், முற்பண அறவிடல்கள் 109,670 ரூபா அதிகமாகவும் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் மூலம் கிடைத்த காசுப் பாய்ச்சல் 1,631,076 ரூபாவால் குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது.

1.6.2 மீண்டெழும் செலவுகள்

ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் தொழிற்பாட்டுச் செலவினங்களுக்காக நி.பி.208 இன் கீழ் ஏனைய அமைச்சுகள் திணைக்களங்களினால் உறப்பட்ட 242,430 ரூபாவும், நிவாரணம் மற்றும் மாற்றங்களின் கீழ், நி.பி.208 இன் கீழ் ஏனைய அமைச்சுகள் திணைக்களங்களினால் உறப்பட்ட 143,679,980 ரூபாவும், ஏனைய செலவுத் தலைப்புகளுக்காக உறப்பட்ட 357,650 ரூபாவும் அதிகமாக காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டதன் காரணமாக தொழிற்பாட்டுச் செயற்பாடுகளுக்காக உறப்பட்ட காசுப் பாய்ச்சல் 144,280,060 ரூபா அதிகமாக காட்டப்பட்டிருந்தது.

1.6.3 மூலதனச் செலவினங்கள்

காசுப் பாய்ச்சல் கூற்றில் பௌதீக சொத்துக்களின் நிர்மாணிப்பு அல்லது கொள்வனவு அல்லது வேறு முதலீடுகளை கைப்பற்றுவதில் நி.பி.208 இன் கீழ் ஏனைய அமைச்சுகள் திணைக்களங்களினால் உறப்பட்ட 1,975,930 ரூபா தொகையும் உள்ளடங்கியிருந்தமையினால் முதலீட்டுச் செயற்பாடுகளுக்காக உறப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் 1,975,930 ரூபா அதிகமாக காட்டப்பட்டிருந்தது.

1.6.4 நிதியல்லாத சொத்துக்கள்

2022 டிசெம்பர் 13 ஆம் திகதிய 2022/05 ஆம் இலக்க அரசாங்கக் கணக்குகள் பற்றிய வழிகாட்டல் கோவையின் 8.2 ஆம் பந்தியின் பிரகாரம் மேற்கொண்டும் அறிக்கையிடப்பட வேண்டிய நிதியல்லாத சொத்துக்கள் இருக்குமாயின் அவற்றை இனங்கண்டு கிரயத்தில் அல்லது கிரயத்தை இனங்காண முடியாதபோது மதிப்பீட்டுப் பெறுமதிக்கு அறிக்கையிட வேண்டுமென்ற போதிலும் திணைக்களத்திற்குச் சொந்தமான 09 நெசவுப் பாடசாலைகள், 08 நெசவுத் தொழிற்சாலைகள் மற்றும் 02 சுற்றுலா விடுதிகளைக் கொண்ட காணிகளினதும் வாகனமொன்றினதும் பெறுமதி 2022 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை கணக்குப் பதியப்பட்டிருக்கவில்லை.

1.6.5 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

திணைக்களத்திற்குச் சொந்தமானதென காட்டப்பட்டிருந்த 14 நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களினதும் இரண்டு சுற்றுலா விடுதிகளினதும் உரிமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக சட்ட ரீதியான சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தலல்லே விசைத்தறி புடவைக் கைத்தொழில் நிறுவனக் காணி மற்றும் கட்டிடம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 30 வருடங்கள் தனியார் நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் குத்தகை செலுத்தப்படுவது தட்டிக் கழிக்கப்பட்டிருந்தது. 2016 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை 8,910,000 ரூபா நிலுவை வரி மீதியானது 2022 டிசெம்பர் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. மேற்படி கட்டிடத்துடனான காணியை குத்தகையாளர் அனுபவித்துக்கொண்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதி வரை அரசாங்கத்திற்கு கையளித்திருக்கவில்லை.

(ஆ) யட்டிநுவர விசைத்தறி புடவைக் கைத்தொழில் நிறுவனம் தனியார் நிறுவனமொன்றுக்கு 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 30 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அனுமதியற்ற பெண் குடியிருப்பாளர் ஒருவர் அவ்வளாகத்தில் தங்கியிருந்தமையின் காரணமாக குத்தகை ஆதனத்தின் சிக்கலற்ற உரிமை பெற்றுக்கொடுக்கப்படாததன் அடிப்படையில் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட வேண்டிய குத்தகைப் பணத் தொகையான 2,756,000 ரூபாவை செலுத்துவதை குத்தகையாளர் தட்டிக்கழித்திருந்தார். அப்பணத்தை அறவிடுவதற்கும் அனுமதியற்ற குடியிருப்பினை அகற்றி காணியின் சிக்கலற்ற உடைமையை பிரதேச செயலாளருக்குச் சாட்ட கணக்காய்வு திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1996 ஆம் ஆண்டு தொடக்கம் 30 வருடங்களுக்காக பிபில நிமிஹல நிறுவனம் தனியார் நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த முகாமைத்துவ பணிப்பாளர் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய குத்தகைக்கு ஏற்புடையதாக 2022 செப்டெம்பர் 27 ஆம் திகதிய இறுதி நடுத்தீர்ப்பின் பிரகாரம் 1,681,250 ரூபா தொகையையும் வட்டியையும்

செலுத்துவதற்கு கட்டளையிடப்பட்டுள்ள போதிலும் குத்தகையாளர் செலுத்தல்களை தட்டிக்கழித்துள்ளார்.

2.2 கணக்கீட்டு அலுவலரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக உள்ளக கணக்காய்வுப் பணியை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக பயனுள்ள முறையியல் உள்ளதாக பிரதம கணக்கீட்டு அலுவலர் மற்றும் கணக்கீட்டு அலுவலர் ஆகியோர் உறுதிப்படுத்த வேண்டும் என்ற போதிலும் அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்பின் பிரகாரம் அத்தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

3. தொழிற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

3.1.1 பணிகள் நிறைவேற்றப்படாமை

கைத்தறி புடவைக் கைத்தொழிலை கிராமிய மட்டத்தில் விஸ்தரித்து கிராமிய தொழில்முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கத்தோடு நடைமுறைப்படுத்தப்படுகின்ற கைத்தறி புடவைக் கைத்தொழில் கிராமங்கள் கருத்திட்டம் சார்பாக 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட கைத்தறிசார் உபகரணங்களில் 23,960,750 ரூபா பெறுமதியான கைத்தறி தொகுதிகள் 220 உம் வைன்டீன் இயந்திரத் தொகுதிகள் 195 உம் அறிகையின் திகதி வரையிலும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன.

3.1.2 எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டத்தை அடையாமை

மீளாய்வாண்டில் புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்கள் 14 இன் நிருவாக நடவடிக்கைகளுக்காக 3.835 மி.ரூபா செலவிடப்பட்டிருந்தாலும் கைத்தறி புடவைக் கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்காக ஊழியர்களைப் பயிற்றுவிப்பது தொடர்பில் நடத்தப்பட்ட பாடநெறிகளின் முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் ஆறு மாதகால பயிற்சிப் பாடநெறி 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மாத்தறை மற்றும் கட்டுபெத்த ஆகிய இரண்டு பயிற்சி நிறுவனங்களில் மட்டும் நடத்தப்பட்டிருந்ததோடு முறையே 02 மற்றும் 04 மாணவர்கள் மட்டும் பாடநெறியைப் பூர்த்தி செய்திருந்தனர்.

(ii) கடந்த வருடமும் மீளாய்வு ஆண்டிலும் முறையே 147 மற்றும் 87 மாணவர்கள் இறுதிச் சான்றிதழ் பாடநெறியைப் பூர்த்தி செய்திருந்த போதிலும் பாடநெறிகளுக்கான மாணவர்களின் பங்கேற்பு கடந்த வருடத்தைப் பார்க்கிலும் நூற்றுக்கு 40 வீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(iii) மீளாய்வாண்டில் 4 நெசவுப் பயிற்சி நிறுவனங்களில் பாடநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கை 1,2,3 மற்றும் 4 வரை குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(iv) 119 மாணவர்களுக்கு வதிவிட வசதிகள் வழங்கப்படக்கூடிய 13 நெசவுப் பயிற்சி நிறுவனங்களில் மீளாய்வாண்டில் 58 மாணவர்கள் வதிவிட வசதிகளைப் பெற்றிருந்தனர். அதன்படி வழங்கக்கூடிய வதிவிட வசதிகளில் நூற்றுக்கு 52 வீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) செலவிடப்பட்ட தொகைக்கு ஒப்பீடாக போதிய அளவில் பயிற்சி பெற்ற மாணவர்கள் உருவாகாமை முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒரு விடயமாக அவதானிக்கப்பட்டது.

3.2 சொத்துக்களின் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உரிமையானது துல்லியமாக இனங்காணப்படாத காவல் கூடம் மற்றும் 02 கட்டிடங்களைக் கொண்ட இராஜகிரியில் உள்ள இயற்கை வர்ணம் தீட்டும் நிலையமானது 30 பேச்சஸ் கொண்ட காணி என்பதோடு அது 2 வருடங்களாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2022 டிசெம்பர் 31 ஆம் திகதி பௌதீக ரீதியில் இருந்த நூல் அளவானது 6.798Kg ஆக காணப்பட்டதோடு நெசவுப் பாடசாலைகளுக்காக பேணிச் செல்லப்பட வேண்டிய நூல்த் தேவையை விஞ்சிக் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டதுடன் அந்த மேலதிக இருப்புகளை பயனுள்ள வகையில் பயன்படுத்த வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4. நல்லாட்சி

4.1 உள்ளக கணக்காய்வு

உள்ளக கணக்காய்வாளர் பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும் வெற்றிடம் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டுக்காக திணைக்கள கணக்காய்வு மற்றும் முகாமைத்தவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கவில்லை என்பதோடு ஒரு அமைச்சுக்கான குழுக் கூட்டமொன்று நடத்தப்பட்டிருந்தது.

ஒப்பம்
பீ.ஜீ.ஐ. நிரஞ்சா
சிரேஸ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பதிலாக

அத்தியாயம் 04 : செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்

விசேட சுட்டி	எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தியின் விகிதாசாரமாக (%)உண்மையான உற்பத்திகள்		
	100% -90%	75% -89%	50% - 74%
1) நெசவுத்தொழில் பயிற்சி நிறுவனத்தின் நிர்வாகம் - 150 மாணவர்களை பயிற்றுவிப்பதற்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுதல்	√		
2) மாகாண கண்காட்சிப் போட்டிகள் நடத்தப்படுதல், விற்பனைச் சந்தை, தேசிய கைத்தறி புடவைக் கண்காட்சி நடத்தப்படுதல்	√		
3) 08 சேவைக்கால பயிற்சிகள் நடத்தப்படுதல்			√
4) வடிவமைப்புப் பயிற்சிப் பாடநெறி பரீட்சை மார்ச் மாதம் நடத்தப்படுதல், 1 வருட வடிவமைப்பு பயிற்சி பரீட்சை ஜூலை மாதம் நடத்தப்படுதல்.	√		

அத்தியாயம் 05 : நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (ளுனுபு) அடைவதற்கான செயலாற்றுகை

இலக்குகள்/நோக்கங்கள்	இலக்குகள்	சாதனைச் சுட்டிகள்	இதுவரையிலான சாதனையின் முன்னேற்றம்		
			0% - 49%	50%- 74%	75% - 100%
4.4 2030 ஆண்டளவில் கண்ணியமான தொழில்கள் மற்றும் தொழில்முயற்சி என்பவற்றுக்காக தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் தகைமைகள் உட்பட தேவையான தகைமைகளைப் பெற்றுள்ள இளைஞர்களினதும் பெரியவர்களினதும் எண்ணிக்கையை கணிசமான அளவில் அதிகரிக்கச் செய்தல்.	2030 ஆண்டளவில் கைத்தறி நெசவுத் தொழில் துறையில் 5000 தொழில்வாண்மையாளர்களுக்காக NVQ மட்டம் 4 வழங்கப்படுதல்	2025 ஆம் ஆண்டளவில் 2500 தொழில்வாண்மையாளர்களுக்கு NVQவழங்கப்படுதல்	√		
9.2 அனைவரும் உள்ளடங்குகின்றதும் நிலைபேறானதுமான கைத்தொழில்மயமாக்கத்தினை ஊக்குவித்தல், 2030 ஆண்டளவில் தேசிய நிலைமைகளுக்கு ஏற்புடையதான தொழில்வாய்ப்புக்களை வழங்கும்போது கைத்தொழில் துறையின் பங்களிப்பினை கோடிட்டுக் காட்டக்கூடிய வகையில் உயர்த்துதல் மற்றும் ஆகக்குறைந்தது அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளில் இப்பங்களிப்பினை இரு மடங்குகளாக மாற்றியமைத்தல்.	கைத்தறி துறையில் பங்களிப்பினை மேம்படுத்துவதன் மூலம் கைத்தொழில் துறையிலிருந்து மொத்தத் தேசிய உற்பத்திக்கு வழங்கப்படுகின்ற பங்களிப்பினை 2030 ஆம் ஆண்டில் 10%ஆக மாற்றுதல்.	2025 ஆம் ஆண்டில் மொத்தத் தேசிய உற்பத்திக்காக வழங்கப்படுகின்ற பங்களிப்பினை உயர்த்துதல்.	√		

அத்தியாயம் 06 : மனிதவள தோற்றப்பாடு

6.1 ஆளணி (பதவியணி) முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	நடப்புப் பதவியணி	வெற்றிடங்கள் / மிகை
சிரேஸ்ட	07	05	02
மூன்றாம் நிலை	01	01	0
இரண்டாம் நிலை	95	87	08
ஆரம்பநிலை	42	30	12

6.2 நிறுவனத்திற்கான செயலாற்றுகை மீது மனித வளப் பற்றாக்குறை அல்லது மிகை தாக்கம் ஏற்படுத்தும் விதம்

- உள்ளக கணக்காய்வாளர் மற்றும் தொழில்நுட்ப அலுவலர் பதவி வெற்றிடங்கள் காரணமாக அது தொடர்பான கடமைகளில் இடர்பாடு காணப்படுகின்றமை.
- தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அல்லது உதவி தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்குரிய ஆளணிக்கான அனுமதி கிடைக்காமையால் அது தொடர்பான விடயங்களை நிறைவேற்ற முடியாமை.
- முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களின் காரணமாக கணக்கு, நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி ஆகிய 03 பிரிவுகளிலும் கடமைகளை நிறைவேற்றுவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

அத்தியாயம் 07 : இணக்க அறிக்கை

	ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளக்கூடிய தேவை	இணக்க நிலை(இணங்குகின்றது/இணங்கவில்லை)	இணங்கவில்லை எனில் அதற்கான தெளிவுபடுத்தல் சுருக்கமாக	இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மான நடவடிக்கைமுறைகள் .
1	**பின்வரும் நிதிக்கூற்றுக்கள;/கணக்குகள் குறித்த திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதிக் கூற்றுக்கள்	இணங்குகின்றது		
1.6	ஏனைய	-		
2	**புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படுதல்(நி.பி.445)**			

2.1	பொதுநிருவாக சுற்றறிக்கை 267/2018 இன்படி நிலையான சொத்துக்கள் பற்றிய பதிவேடு இற்றைபடுத்தப்பட்டு பேணப்பட்டு வருதல்	இணங்குகின்றது		
2.2	தனிப்பட்ட சம்பளப் பதிவேடுகள்/தனிப்பட்ட சம்பள அட்டைகள் இற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
2.3	கணக்காய்வு விசாரணைப் பதிவேடுஇற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
2.4	உள்ளகக் கணக்காய்வு அறிக்கைப் பதிவேடு இற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
2.5	சகல மாதாந்தக் கணக்குச் சுருக்கங்களும் (ஊஐபுயுளு) தயாரிக்கப்பட்டு குறித்த திகதியில் பொதுத் திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்படுதல்	இணங்குகின்றது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளைப் பதிவேடுஇற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
2.7	பொருட்பதிவேடு இற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
2.8	இருப்புப் பதிவேடு இற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
2.9	சேத இழப்புப் பதிவேடு இற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
2.10	பொறுப்புக்கள் பற்றிய பதிவேடு இற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
2.11	அடிச்சீட்டு புத்தகப் பதிவேடு (GA-N20) இற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
03	**நிதி நிர்வாகத்திற்காக செயற்பாடுகளை ஒப்படைத்தல் (நி.பி.135)**			

3.1	நிதி அதிகாரம் நிறுவனத்தினுள் ஒப்படைக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
3.2	நிதி அதிகாரம் நிறுவனத்திற்குள் ஒப்படைக்கப்பட்டிருத்தல் தொடர்பாக விழிப்பூட்டப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
3.3	சகல கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் மூலம் அங்கீகரிக்கப்படுகின்ற வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
3.4	2014.05.11ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்கமுடைய பொதுக் கணக்குச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தின் சம்பள அட்டை மென்பொருள் பக்கேஜ் பயன்படுத்தப்படும்போது கணக்காளரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு செயற்படுதல்	இணங்குகின்றது		
4	**வருடாந்தத் திட்டங்களைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படுதல்	இணங்குகின்றது		
4.2	வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படுதல்	இணங்குகின்றது		
4.3	மீளாய்வாண்டுக்காக 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் பிரகாரம் வரவு செலவுத்திட்டம் அங்கீகரித்துக்கொள்ள ப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது		
4.4	வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்படுதல்	இணங்கவில்லை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் இல்லாமை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை அங்கீகரித்துக்கொள்ளல்

4.5	வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்கு(NBD) குறித்த திகதியில் சமர்ப்பிக்கப்படுதல்	இணங்குகின்றது		
4.6	வருடாந்த காசுப் பாய்ச்சல் கூற்று குறித்த திகதியில் திறைசேரியின் தொழிற்பாட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
4.7	காலாண்டு அறிக்கைகள் குறித்த திகதியில் பொதுத் திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
5	**கணக்காய்வு விசாரணை**			
5.1	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் குறித்துரைக்கப்பட்டுள்ள திகதியில் அனைத்துக் கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதில் வழங்கப்படுதல்	இணங்குகின்றது		
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி.பி.134(2) DMA/1-2019 இன்படி, வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடப்பட்டதன் பின்னர் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்படுதல்	இணங்கவில்லை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் இல்லாமை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை அங்கீகரித்துக்கொள்ளல்
6.2	சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் வழங்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
6.3	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உப பிரிவின் பிரகாரம் சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளுக்குமான பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்குச்	இணங்கவில்லை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் இல்லாமை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை அங்கீகரித்துக்கொள்ளல்

	சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்			
6.4	நிதிப் பிரமாணம் 134(3) இன் பிரகாரம் சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்குமான பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்**			
7.1	னுஆயு சுற்றறிக்கை 1-2019 இன் பிரகாரம் ஆகக் குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் 4 ஏனும் உரிய வருடத்தில் நடத்தப்பட்டிருத்தல்	இணங்கவில்லை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் இல்லாமை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை அங்கீகரித்துக்கொள்ளல்
8	**சொத்துக்களுக்கான முகாமைத்துவம்**			
8.1	01/2017 ஆம் இலக்க சொத்துக்களுக்கான முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் சொத்துக்களுக்கான கொள்வனவு மற்றும் அகற்றல் பற்றிய தகவல்கள் கொம்ப்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
8.2	மேற்படி சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான தொடர்பு உத்தியோகத்தரை நியமித்து குறிப்பிட்ட உத்தியோகத்தர் தொடர்பாக கொம்ப்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அறிக்கையிட்டிருத்தல்	இணங்குகின்றது		
8.3	பொதுநிதிச் சுற்றறிக்கை இலக்கம் 05/2016 இன் படி பொருட் கணிப்பீடுகள் நடத்தப்பட்டு உரிய அறிக்கைகள் குறித்த திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		

8.4	வருடாந்த பொருட் கணிப்பீட்டின் மூலம் வெளிக்கொணரப்பட்ட மிகை, பற்றாக்குறை மற்றும் ஏனைய விதப்புரைகள் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
8.5	பயனற்ற பொருட்களுக்கான அப்புறப்படுத்தல் நி.பி.772 இன் பிரகாரம் மேற்கொள்ளப்படுதல்	இணங்குகின்றது		
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	ஒதுக்கத்தின் வாகனங்கள் தொடர்பாக தினசரி ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு குறித்த திகதியில் கணக்காய்வாளருக்குச் சமர்ப்பித்தல்	இணங்குகின்றது		
9.2	வாகனங்கள் பயனற்றதாகமாறி 06 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதியில் அகற்றப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
9.3	வாகன லொக் புத்தகங்கள் பேணப்பட்டு அவை இற்றைப்படுத்தப்பட்டு பேணிச் செல்லப்படுதல்	இணங்குகின்றது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்துத் தொடர்பாகவும் நி.பி.103,104,109 மற்றும் 110 இன் பிரகாரம் நடவடிக்கையெடுத்தல்	இணங்கவில்லை	காப்புறுதி மூலம் இழப்பு மீளளிப்புச் செய்துகொள்ளப்படுதல்	தொடர்படைய தரப்பினர்களிடமிருந்து உரிமைகோரல் அல்லாத கொடுப்பனவுக்கானமீளளிப்பு
9.5	2016.12.29 ஆம் திகதிய 2016/30ஆம் இலக்கமுடைய பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் எரிதல் மீண்டும் பரிசோதிக்கப்படுதல்	இணங்குகின்றது		

9.6	குத்தகைக் காலப்பகுதியின் பின்னர் குத்தகை வாகனங்களின் முழுமையான உரிமை மாற்றப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
10	**வங்கி கணக்குகளுக்கான முகாமைத்துவம்**			
10.1	வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு,உறுதிபடுத்தப் பட்டு உரிய தேதிக்குள் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
10.2	மீளாய்வாண்டில் அல்லது முந்தைய ஆண்டுகளில் இருந்து வந்த செயலற்ற வங்கிக் கணக்குகள் தீர்க்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
10.3	வங்கி இணக்கக் கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தநிலுவைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின்படிசெயற்பட்டு குறித்த நிலுவைகள் ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
11	**ஏற்பாடுகளின் பயன்பாடு**			
11.1	மேற்கொள்ளப்பட்டிருந்த ஒதுக்கீடுகள் அவற்றின் வரம்புகள் மீறப்படாமல் செலவிடப்படுதல்	இணங்குகின்றது		
11.2	நி.பி.94(1) இன் பிரகாரம் வருட இறுதியில் எஞ்சியுள்ள ஏற்பாடுகளை விஞ்சிச் செல்லாத பொறுப்புக்கள்	இணங்குகின்றது		
12	**அரச ஊழியர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணங்குகின்றது		
12.2	நிலுவைக் கடன் தொடர்பாக காலப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.	இணங்குகின்றது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக இருந்து வருகின்ற நிலுவைக் கடன்கள் தீர்க்கப்பட்டுள்ளன.	இணங்குகின்றது		
13	**பொது வைப்புக்கணக்கு**			

13.1	காலந்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நி.பி.571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு வருதல்	இணங்குகின்றது		
14	**பணி முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வாண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தின் நிலுவை திறைசேரியின் தொழிற்பாட்டுத் திணைக்களத்திற்குஅனுப்பப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
14.2	நி.பி.371இன் பிரகாரம் விநியோகிக்கப்பட்ட குறிப்பிட்ட பணிக்கான துணைப் பணி முற்பணம் குறிப்பிட்ட பணி முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்படுதல்	இணங்குகின்றது		
14.3	நி.பி.371 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எல்லை மீறப்படாத வகையில் குறித்த பணிக்கான துணைப் பணி முற்பணம் விநியோகிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
14.4	பணி முற்பணக் கணக்கின் நிலுவை திறைசேரியின் புத்தகங்களுடன் மாதாந்தம் இணக்கம் செய்யப்படுதல்	இணங்குகின்றது		
15	**வருமானக் கணக்கு**			
15.1	குறிப்பிட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக திரட்டப்பட்ட வருமானத்தில் மீள் செலுத்தல் மேற்கொள்ளப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
15.2	திரட்டப்பட்டிருந்த வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்படாமல் நேரடியாக வருமானத்தில் வரவு வைக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		

15.3	நி. பீ. 176 இன்படி நிலுவை வருமான அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எல்லைக்குள் பதவியணி பேணப்பட்டு வருதல்	இணங்கவில்லை	இளைப்பாறல் மற்றும் இடமாற்றங்கள் இடம்பெறுதல்	1.திணைக்களம்சார் ஆட்சேர்ப்புக்கள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. 2.ஒருங்கிணைந்த/ நாடு தழுவிய சேவைகளுக்கான வெற்றிடங்கள் தொடர்பாக விழிப்பூட்டப்பட்டுள்ளன
16.2	பதவியணியின் சகல அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியல்கள் எழுத்துமூலம் வழங்கப்பட்டுள்ளன.	இணங்குகின்றது		
16.3	2017.09.20 ஆம் திகதிஆளுனுசுற்றறிக்கை இலக்கம் 04/2017 இன் பிரகாரம் சகல அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
17	**பொதுமக்களுக்கு தகவல்கள் வழங்கப்படுதல்**			
17.1	தகவல் அறிவதற்கான சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு தகவல் வழங்கும் பதிவேடொன்று இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
17.2	நிறுவனம் பற்றிய தகவல்கள் அதன் வலைதளத்தின் ஊடாக அல்லது மாற்றுவழிகளின் ஊடாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் ஊடாக மக்களின் பாராட்டுக்களை/குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கான வசதி வழங்கப்பட்டுள்ளது.	இணங்குகின்றது		

17.3	தகவல் அறிவிதற்கான சட்டத்தின் 08ஆம் மற்றும் 10 ஆம பிரிவுகளின் பிரகாரம் வருடத்திற்கு ஒரு தடவை அல்லது இருதடவை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணங்குகின்றது		
18	**பிரஜைகள் சாசனம் நடைமுறைபடுத்தப்படுதல்**			
18.1	05/2008 ஆம் இலக்க மற்றும் 05/2018(1) ஆம் இலக்கமுடைய பொதுநிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரஜைகள் / சேவைபெறுநர் சாசனம் தயாரிக்கப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டிருத்தல்	இணங்குகிறது		
18.2	குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் பிரஜைகள் / சேவைபெறுநர் சாசனம் தயாரிக்கப்படுதல் மற்றும் நடைமுறைபடுத்தப்படுதல் நடவடிக்கைகளுக்கான மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக நிறுவனத்தினால் முறையொன்று தயாரிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகிறது		
19	**மனித வளத் திட்டம் தயாரிக்கப்படுதல்**			
19.1	2018.01.24 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இணைப்பு 02 மாதிரியை அடிப்படைக்கொண்டு மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.	இணங்குகிறது		
19.2	பதவியணியைச் சேர்ந்த சகல அங்கத்தவர்களுக்காகவும் வருடமொன்றில் ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத பயிற்சி வாய்ப்பு மேற்படி மனித வளத் திட்டத்தில் உறுதிபடுத்தப்பட்டிருத்தல்	இணங்கவில்லை	வகுப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவ ில்லை	வகுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

19.3	மேற்படி சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் தரப்பட்டுள்ள மாதிரியை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த பணியாட்டொகுதிக்கும் வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருத்தல்	இணங்கவில்லை	வகுப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவ ில்லை	வகுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.
19.4	மேற்படி சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்தியின் பிரகாரம் மனித வள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படுதல், ஆற்றல் விருத்தித் திட்டம் தயாரிக்கப்படுதல் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைபடுத்தப்படுதல் பற்றிய பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டு சிரேஸ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருத்தல்	இணங்குகிறது		
20	**கணக்காய்வுப் பந்திகளுக்கு பதிற் செயற்பாடு காட்டுதல்**			
20.1	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கடந்த வருடங்கள் தொடர்பாக விநியோகிகப்பட்ட கணக்காய்வுப் பந்திகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சரிசெய்யப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		